[1978 மார்ச் 8

*வினா 442—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக வீடிழந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதற்குப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) 2,84,815 குடிசைகள்.

(ஆ) 6—3—1978 வரை ரூ. 5,63,82,300.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணம் விரைவாக கொடுக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் மிக அவசர அவசரமாகச் செயல்பட்டதின் காரணமாக உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உதவி கிடைக்காமலும், பாதிப்பு இல்லாதவர்கள் பெரும்பான்மையோர் இந்தப் பலனை பெற்றதும் அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி புகார்கள் வந்தனவா? அப்படியானால் அவை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அரசுக்கு இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை. புகார் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து தான் வந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : வீடு இழந்தவர்களுக்கு 200 ரூபாயும், துணிமணி இழந்தவர்களுக்கு 300 ரூபாயும் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்து இருந்தும், இதிலுள்ள முழுத் தொகையும் சிதம்பரம் வட்டத்திலும், நெல்லிக்குப்பம் பகுதியிலும் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறேன். இதைப்பற்றி அரசு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு கோவிந்தராசன் அவர்கள் இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த புகார் தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவருக்கு மட்டும் தரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் என்னிடத்திலும் மனு தந்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச், 8]

[முற்பகல் 9-20]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக வீடு இழந்தவர்கள் மொத்த எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே, தாலூகா வாரியாக, எந்தெந்த தாலூகாவிலே எவ்வளவு பேர்கள் வீடுகள் இழந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ? அதைப் போல், தாலூகா வாரியாக எவ்வளவு தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்னிடம் இருக்கின்ற குறிப்பு அடித்துச் செல்லப்பட்ட குடிசைகள் எண்ணிக்கை; எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது என்பதைப் பற்றிய எண்ணிக்கை. அதைத் தவிர, மற்றத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப் பட்ட கைத்தறித் தொழிலாளர்கள் எத்தனை பேர் ? அவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சிவசாமி அவர்கள் ஒரு தனிக் கேள்வி போட்டால் உதவியாக இருக்கும்.

விற்பனை வரி விதிப்பு.

* வினா 443—

திரு. எஸ். ஜே. இராமசாமி :

திரு. என். கிட்டப்பா :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விற்பனை வரியை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக எக்சைஸ் தீர்வை விதிப்பது குறித்து மத்திய அரசு நமது மாநில அரசை கருத்து ஏதேனும் கேட்டு இருந்தார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.